
Regd. No. M. 2475. SEPT.—OCTR. 1930. Vol. V—No. 9-10.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

12 NOV 1930

ஆபீஸ்: மைலாப்பூர்: மதராஸ்.

### பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 50. | எல்லா பஞ்சாயத்துகளுக்கும் முக்கிய அறிக்கை. | 113 |
| 51. | பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் ஐந்தாவது மாஹாண மஹாநாடு. | 116 |
| 52. | ஸ்ரீமான் ஏ. இராஜகோபால ரெட்டி அவர்கள் உபந்யாஸம். | 117 |
| 53. | ஸ்ரீமான் ஏ. சுவாமிநாத ஐயர் உபந்யாஸம். | 121 |
| 54. | ஸ்ரீமான் வி. ராமதாஸ்பந்துலு அவர்கள் உபந்யாஸம். | 122 |
| 55 | தீர்மானங்கள். | 128 |


வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிடர் & மானேஜர்:
ஏ. சுவாமிநாதய்யர், பி. ஏ.

Thoughtful References ! Unique Opportunity !!

Good chance ! Very Cheap !! Worth Reading !!!

Indispensable Rural matters profusely treated.

Back Volumes of " RURAL INDIA " Ready for Sale

(in English, Telugu & Tamil)

**Rupees Two each Volume.**

Volumes I, II, III & IV now available.

**Rupees Six Only for all the Four Volumes.**

Contains many useful articles by eminent persons on rural education, rural health and sanitation, agricultural improvements and forestry, Cooperation and cottage industries, veterinary matters, Cattle diseases and the like:

N. B, Volume III half Volume. Price Repee One only.

Few more copies only in stock.

Can be had by V. P. P. Packing, postage extra.

Apply to :—

The Manager

" Rural India "

Mylapore, Madras.

---

**The Magazine Press Limited, Chingleput.**

Printers to the Forest Panchayatdar's Union Limited, Madras.


பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய **புத்தகங்கள்** நம்மிடம் கீழ்கண்ட விலைக்கு எப்பொழுதும் கிடைக்கும் :—

தபால் மூலம் வேண்டுவோர் தபால் சிலவையும் சேர்த்து முன்பாக மணியாடர் செய்தால் தபாலில் அனுப்பமுடியும் வி. பி. கிடையாது

| | | | | விலை | | | தபால் சிலவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | குற்ற ரிபோர்ட்டு | 200 | பக்கப் | 2 | 0 | 0 | 0 | 6 | 0 |
| 2. | கால் நடை பாஸ் | 100 | ... | 1 | 0 | 0 | 0 | 3 | 0 |
| 3. | தழை பாஸ் | 100 | ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 4. | குண்டுக்கல் வகைறு பாஸ் | 100 | ... | 0 | 12 | 0 | 0 | 3 | 0 |
| 5. | மதாந்தர ரிபோர்டு | 50 | forms | 0 | 8 | 0 | 0 | 3 | 0 |

எந்த புஸ்தகங்கள் வேண்டுமோ, அவைகளின் விலையையும் தபால் சிலவையும் சேர்த்து மணியார்டர் அனுப்பினால், புஸ்தகங்கள் உடனே தபால் பார்ஸலில் அனுப்பப்படும்.

மானேஜர் : மாகஸீன் அச்சுக்கூடம் லிமிடெட், செங்கல்பட்டு.



1930ஹு அக்டோபர்மீ 4உ சென்னையில் பாரெஸ்டு பஞ்சாயத்தார் 5வது மஹாநாடு நடந்தபோது
எடுத்த படம் : கனம் வி. ராம்தாஸ் பந்துலு அக்ராஸனம் வகித்தார்.

199397


## ஸூராஜ்மல் கம்பெனியாருடைய
## வெள்ளி சாமான்கள்

# எல்லோருக்கும் திருப்தியை கொடுக்கும்.

நம்முடைய வெள்ளி சாமான்கள் சில பேருக்கு மாத்திரம் திருப்தி அளிப்பவை அல்ல. ஸகலமானவர்களுக்கும் தேவையானவை. மிகவும் அதிகமாகவும், நேர்த்தியாகவும் அவை தயாரிக்கப் படுவதால் வெகு ஸரஸமான விலைக்கு விற்கக் கூடும்.

ஸாமான்கள் வெகுநாளைக்கு உபயோகப்படுவதால் சிக்கனமானவையே. நீங்கள் கஷ்டப்படும்போதும்: ஸூகப் படும்போதும் அவை உங்களுக்குப் பயனளிப்பவை.

## ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட் மதராஸ்.

ராக் போர்ட்டு கேட் : திருச்சி.

# பஞ்சாயத்து லைப்ரெரிகளுக்கு முக்கியமான நவீன முறை புஸ்தகங்கள்!

நாவல்கள், நாடகங்கள் புராணங்களைவிட மேலானது!!

## கூட்டுறவு.

| | | | |
|---|---|---|---|
| கூட்டுறவு முதல் நூல்—காஜியால், 1929 | 0 | 8 | 0 |
| கூட்டுறவு, ஓர் நாடகம்—நாராயணசாமி அய்யரால் 1929 | 0 | 2 | 6 |
| கூட்டுறவு விளக்கம்—நாராயணசாமி அய்யரால் 1930 | 0 | 8 | 0 |
| கூட்டுறவு, கிராம சங்கம்—ஓர் நாடகம், ராஜகோபாலய்யரால் 1929 | 0 | 8 | 0 |
| இந்தியாவின் கூட்டுறவு முயற்சி—1914-ம் வருஷத்திய இந்திய துரைத்தனத்தாரின் தீர்மானம்—நாராயணசாமி அய்யரால், 1929 | 0 | 8 | 0 |
| தொழிலாளர் கூட்டுறவு- (ஒரு சிறிய நாடகம்) 1930 | 0 | 3 | 0 |
| மாக்கலகான் கமிட்டி ரிப்போர்ட்டு 1930 | 0 | 12 | 0 |

## ஜீவனோபாய முறை.

| | | | |
|---|---|---|---|
| இந்திய கிராம ஜீவனோபாய முறை—எஸ். கேசவய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதிய புஸ்தகத்தின் தமிழ் மொழிப் பெயர்ப்பு, 1930 | 5 | 0 | 0 |

## கிராம பஞ்சாயத்து.

| | | | |
|---|---|---|---|
| கிராம பஞ்சாயத்துகள்—முனிஸாமி அய்யா ஆங்கிலத்தில் எழுதிய புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு, 1930 | 2 | 0 | 0 |

## புக்கீப்பிங்.

| | | | |
|---|---|---|---|
| வர்த்தக கணித நூல் அல்லது தமிழ் புக்கீபிங் | 2 | 0 | 0 |

## கைத்தொழில்.

| | | | |
|---|---|---|---|
| இந்திய பருத்தி நெசவுத் தொழில்,—M. P. காந்தியின் ஆங்கில புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு, 1930 | 3 | 0 | 0 |
| கைத்தொழில் முறைகள்,—1000 கைத்தொழில் முறைகளடங்கிய அருமையான நூல் | 1 | 8 | 0 |

## வியாபாரம்.

| | | | |
|---|---|---|---|
| வியாபார தந்திரம் ... ... ... | 1 | 8 | 0 |
| வர்த்தக யுக்தி ... ... ... ... | 0 | 12 | 0 |
| வர்த்தக யூகம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| ஹென்ரி போர்ட் அல்லது வெற்றியின் ரகசியம்—பூலோகத்தில் மோட்டார் வியாபாரத்தில் விசேஷமான வெற்றியடைந்த ஒரு அமெரிக்கரின் வினோத சரித்திரம் | 1 | 8 | 0 |

உங்கள் விலாஸம் தெரிவித்தால் எங்கள் புஸதக காட்லாக் அனுப்புகிறோம்.

**ஸிடி புக் கம்பனி, தபால் பெட்டி 283, மதருஸ்**

**The City Book Co.,-Post Box 283, Madras.**

உம்முடைய மதிப்பு என்ன தெரியுமா?



உம்முடைய வருமானத்தைத் தெரிவித்து எங்களைக் கேளுங்கள்:—

## யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

ஹெட் ஆபீஸ்: கராச்சி.

---

### சுகாதார பாடங்கள்.

I, II, IIIவது பாரங்களுக்கு (விலை முறையே, 6 அணா, 4 அணா, 6 அணா) வீரவநல்லூர், ஸெகண்டரி பாடசாலை ஆசிரியர் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியவை.

தமிழ்நாடு "சிறு சிறு பாடங்களாக பல படங்களுடன் ஆசிரியர் சுகாதார முறைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்"

ஆரோக்கிய தீபிகை "சுலப நடையில் சிறுவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் படி எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலைகளிலும் இவைகளைப் பாடப் புத்தகங்களாக வைப்பார்களென்று நம்புகிறோம்".

ஊழியன் "பள்ளி மாணவர் மட்டுமன்று; பிறரும் படித்துப் பெரும் பயனடையத் தக்கவை".

புத்தகங்கள் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மைலாப்பூர், மாரி செட்டி வீதி 19 ந. வீடு

K. S. M. சர்மா விடமும் கிடைக்கும்.

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

***Formerly Professor of Chemistry, Bhagalpur College.***

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும், வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப் படும். வியாதி யின் விவரத்தைத் தெரிவித்தால் இனமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரி யான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.



# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V. 1930ஹு Sept.—October மீ. நெ. 9-10.


## எல்லா பஞ்சாயத்துகளுக்கும் முக்கிய அறிக்கை.

நமது பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் எவ்விதமாக உண்டாயிற்று? சென்னை பாரெஸ்டு சட்டம் கிராமாபிவிருத்திக்கு இடை யூறாக நின்றபடியால் கிராம ஜனங்களிற்கு மேய்ச்சல், விறகு, எருத்தழைக் கொம்பு சௌகரியங்கள் அற்றுப்போய் விட்டன. கிராம ஜனங்கள் கூக்குற லிட்டு, மஹாநாடுகளில் தீர்மானங்களைக் கைக்கொண்டு, முறையிட்டு வந்த தின்பேரில், கவர்மெண்டார் தங்களுடைய பாரெஸ்டு நோக்கம் ஜனங்களுக்கு மேற்கூறிய வகைகளில் சௌகரியங்களை ஏற்படுத்த வேண்டிய நிமித்தமே யொழிய அவர்கள் அவைகளிலிருந்து லாபத்தையடைய வேண்டுமே என்கிற எண்ணத்துடனில்லை யென்று 1890-ம் வருஷத்தில் ஒருவிசையும் பின்பு 1894-ம் வருஷத்தில் இன்னொருவிசையும் பகிரங்கமாய் வற்புறுத்திக் கூறி னார்கள். அப்படியிருந்தும் சென்னை பாரெஸ்டு சட்டமானது நடவடிக்கையில் மேற் கூறிய நோக்கங்கள் முன்னுக்கு வரவேண்டிய வகையில் சாதகப்படுத்த வே இல்லை. ஜனங்களின் கூக்குறல் பிரபலமாய் விட்டபடியால் கவர்மெண் டார் ஒரு கமிட்டியை நியமித்து விசாரணைகளை செய்யச் சொன்னார்கள். கமிட்டியார் விசாரணைகளைச் செய்து முடிவில் மேற்கூறிய குறைகள் இருந்து வருவது வாஸ்தவம் தான் என்றும், அக்குறைகள் நீங்க வேண்டுமானால் கிரா மக் காடுகள் கிராம ஜனங்களின் நிர்வாஹத்திலேயே வைக்கப்பட வேண்டு மென்றும் அபிப்பிராயம் கூறினார்கள். கவர்மெண்டார் அவ்வபிப்பிராயத்தை யொப்புக்கொண்டு காடுகளை கிராமங்களில் இருக்கும் கால்நடைச் சொந்தக்

காரர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட, பஞ்சாயத்துகளின் பரிபாலனத்திற்கு மாற்றினார்கள்.

காடுகளைப் பஞ்சாயத்துகளின் பரிபாலனத்திற்கு மாற்றினார்களே யொழிய காடுகள் கிராம ஸமூஹங்களின் க்ஷேமத்திற்காகத் தக்கபடி உதவும்படி இன்னமும் செய்யப்படவில்லை. பஞ்சாயத்துகள் அதிகாரிகளின் அமுலிலிருக்கின்றன. பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களும், ரெவினியூ டிவிஷனல் ஆபிஸர்களும், கலெக்டர்களும், ரெவினியூ போர்டு லாண்டு ரெவினியூ மெம்பரும் பஞ்சாயத்துகளின் மேல் அதிகாரிகளாக விருக்கிறார்கள். கிராம ஜனங்களின் மேய்ச்சல் விறகு, எரு, தழை கொம்பு சௌகரியங்கள் இப்பொழுதும் பஞ்சாயத்துகள் இல்லாத காலத்தில் விட க்ஷீணித்திருக்கின்றன. பஞ்சாயத்துகளின் அதிகாரங்களும் அக்ரீமெண்டு பாரத்தில் காணப்படுகின்றனவே யொழிய அவைகளைப்பற்றின சட்டமொன்றும் இன்னமும் ஏற்படவில்லை. மேலும், அஸ்ஸெஸ் மெண்டுகள் அதிகமாக விருக்கின்றன. அபிவிருத்தி முயர்ச்சிகளுக்குப் பணமேயில்லை. அபிவிருத்தி லாபங்களும் அஸ்ஸெஸ் மெண்டுகளில் சேர்க்கப்படுகின்றன. அஸ்ஸெஸ் மெண்டுகள் குத்தகை வருஷ ஆரம்பத்திலேயே கட்டப்படும்படி யாகவுமிருந்து வருகிறது. மேய்ச்சல் வருப்படிகள் குத்தகை வருஷத்தின் மத்தியில் தான் வசூலாகிறபடியால் பஞ்சாயத்தார்கள் அஸ்ஸெஸ் மெண்டை செலுத்தத் தங்கள் சொந்தப் பணத்தைக் கட்டி உதவ வேண்டியிருக்கிறது. கவர்மெண்டார் அதிக மேய்ச்சல் வரும்படிகளையும் தாங்களே எடுத்துக் கொள்ளுகிறார்கள். கம்பவுண்டிங்கு பீஸ் முழுமையுமே பஞ்சாயத்துகளைச் சேர வேண்டும். கம்பவுண்டிங்கு அதிகாரம் எல்லா பஞ்சாயத்துகளுக்குமே கொடுக்கப்பட வேண்டும். கம்பவுண்டிங்கு பீஸ்களும், அபராதங்களும் எல்லாமே பஞ்சாயத்துகளைச் சேர வேண்டும். இன்னும் அநேக குறைகளிருக்கின்றன.

ஆகையால் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் ஐக்கிய உணர்ச்சியைப் பாராட்டி ஒற்றுமையுடன் இடைவிடாமல் பாடுபட வேணடும். 40 வருஷ காலமாக பிரமுகர்களாகிய திவான் பஹதூர் கேசவ பிள்ளை முதலிய தேசாபிமானிகளின் கிளர்ச்சிகளால் தான் கவர்மெண்டார் பஞ்சாயத்துகளை யுண்டாக்கி காடுகளின் நிர்வாஹத்தை அவைகளுக்கு ஒப்புவித்தார்கள். சட்டசபையில் ஸ்ரீமான் ஹரிசர்வோத்தமராவ் அவர்களைப் போன்ற தேசத் தொண்டர்கள் விடாமல் வாதித்து வந்ததின் பேரில் தான் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் நிமித்தம் ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டர் தயாரிக்கப் பட்டது. இடைவிடாமல் கிளர்ச்சி செய்தாலொழிய நமக்கு நன்மைகள் ஏற்பட மாட்டா.

நம்மைக் கிளர்ச்சி செய்யும் படி தூண்டக்கூடியது யாது! நமது ஐக்கிய உணர்ச்சி தான் நம்மை அத்தகையில் செலுத்தும், நமக்கு ஐக்கிய உணர்ச்சியைச் சிறிது உண்டாக்கி யிருப்பது எது? நமது யூனியன்தான். அது நாலு வருஷமாகப் பாடுப்பட்டு வந்ததில் முக்கியமான விஷயம் யாதெனில் அது நம்மில் சிலருக்காவது ஐக்கிய உணர்ச்சியை உண்டாக்கி கொஞ்ச உற்சாஹத்தையும் உண்டாக்கி யிருக்கிறது. நமது யூனியன் சரியாய் நடந்தால் தான் நமது இயக்கம் ஓங்கி அபிவிருத்தி மேல் மேலும் உண்டாகும். நமது யூனியன் அழிந்து போனால் நமது பாரெஸ்டு பஞ்சாயத்துகளே அழிந்து போய் விடுமென்பதை இப்பொழுதாவது தெறிந்து கொள்ளுங்கள். நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் தான் நமக்கு பசு தான்ய சமிருத்தியை உண்டாக்க வேண்டு மாதலால் நாம் இவ்வியக்கத்தை ஓங்கச் செய்யாமற் போனால் தேசத்தில் தரித்திரம் அதிகரிப்பதற்கு நாம் தான் பாத்திரம் ஆவோம். அந்தப் பாபம் நம்மைத்தான் சேரும்-நிச்சயம்-ஆகவே ஒருவர் கூடத்தவராமல் இனியாவது எல்லாப் பஞ்சாயத்தார்களும் உடனே யூனியனில் பங்குகளை யெடுத்துக் கொள்ள வேண்டும். நமது யூனியனை நசித்துப்போகாமல் வைத்திருப்பது எது? அது தான் நமது பத்திரிகை. நமது பத்திரிகைதான் நமது இயக்கத்தையும் ஓங்கச்செய்கிறது, பஞ்சாயத்தார்கள் அதை மிக்க ஆவலுடன் வாசித்து வருகிறார்களென் பதற்குப் பல அத்தாக்ஷிகள் ஏற்படுகின்றன. மேலும், எல்லாப் பஞ்சாயத்துகளும், யூனியனும் பத்திரிகையும் நிற்காமல் நடக்க வேண்டு மென்று எழுதிக் கொண்டே வருகின்றன.

அக்டோபர்மீ 4உ யன்று நமது 5-வது மஹாண மஹாநாடு சென்னை மயிலாப்பூர் பெண்ணாத்தூர் சுப்பிரமணிய ஐயர் ஹைஸ்கூலின் ஸபா மண்டபத்தில் வெகுசிறப்பாக நடந்தது. நமது பிரமுகர்களில் வெகு முக்கியரானவரும், கவுன்சில் ஆப் ஸ்டேட்டில் மெம்பராக விருந்த வருமான ஸ்ரீமான் வி. ராம்தாஸ் பந்துலு அவர்கள் தலைமை வஹித்தார். திவான் பஹதூர் ஜீ. நாராயணசாமி செட்டியார் சி. ஐ. ஈ. அவர்களும், ஸ்ரீமான். வி. என் குப்புராவ் எம். எல். சி. அவர்களும், ஸ்ரீமான் ஜீ. ஹரிசர்வோத்தமராவ் அவர்களும் அஸ்ஸெம்பிளி டிப்டி பிரஸிடெண்டாக விருந்த திவான் பஹதூர் டி. ரங்காச்சாரியார் சி. ஐ. ஈ., எம். எல். ஏ. அவர்களும் இன்னும் அநேக கனவான்களும் வந்திருந்தார்கள். எல்லோருடைய அபிப்பிராயமும் யூனியனும் பத்திரிகையும் கட்டாயமாய் நிற்காமல் நடக்க வேண்டு மென்பது தான் மஹாநாட்டில் மேற்கூறிய குறைகளை பற்றித் தீர்மானங்கள் கைக்கொள்ளப் பட்டதுடன் நமது யூனியனும் பத்திரிகையும் நிற்காமல் நடக்க வேண்டு மென்றும், பஞ்சாயத்துகள் சந்தாபாக்கிகளை உடனே செலுத்த வேண்டு மென்றும் இல்லா விட்டால் யூனியனின் முயர்ச்சிகளும் பத்திரிகையும் நின்றுபோய் நமது இயக்கமே நசித்து விடுமென்றும், ஒரு முக்கியமான தீர்மானம் கைக்கொள்ளப்பட்டது. ஆகையால் பஞ்சாயத்துகள் இனியாவது விழித்துக் கொண்டு தங்களுடைய இயக்கத்தை நசித்துப் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். சந்தாபாக்கிகளை

அவைகள் உடனே செலுத்த வேண்டும். அப்படி அவைகளிட மிருந்து பாக்கித்தொகைகள் வராமல் போனால் இந்த லெட்டரை அநுப்பின 10 தினங்களுக்கெல்லாம் இந்த மாதச் சஞ்சிகையை பாக்கியாக இருக்கும் தொகைகளுக்கு வி. பியில் அநுப்ப உத்தேசித்திருக்கிறேன். வி. பி. க்களை பஞ்சாயத்துகள் திருப்பி யநுப்பாமல் பணங்களைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நமக்குப் பல விரோதிகள் இருக்கக்கூடும். நம்முடைய யூனியனுக்கும் பத்திரிகைக்கும் சந்தாப் பணத்தை அனுப்புகிற விஷயத்தில் அவர்களுடைய பேச்சைக் கேட்கக்கூடாதென்றும் வணக்கமாய்ச் சொல்வேன்.

பத்திரிகை சந்தா பாக்கி வைத்துக் கொண்டிருக்கிற பஞ்சாயத்துளுக்கு டிபாஸிட் இருந்தால் சந்தா பாக்கிகள் அவைகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

பஞ்சாயத்தார்கள் யூனியனில் பங்குகளை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், கன்பரன்சுக்கு டொனேஷனைக் கொடுக்கக் கூடாதென்றும் பத்திரிகைச் சந்தா பாக்கிகளைக் கொடுக்கக்கூடா தென்றும் சொல்ல ஒருவருக்கும் அதிகாரமில்லை. யாராவது உங்களுக்கு அம்மாதிரி சொல்லும் பக்ஷத்தில் அவர்களுக்கு நீங்கள் மேற் குறிப்பிட்ட படியே பதிலளித்து நீங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யும் படிக்கோறுவேன். அப்படிப் பட்டவர்களையும் எனக்குக் குறிப்பிட்டு எழுதும் படிக்கும் கேட்டுக்கொள்வேன்.

மஹாநாட்டின் நடவடிக்கைகளும் வறலாறும் இம்மாதச் சஞ்சிகையில் படத்துடன் காணப்படும். கட்டாயமாய் ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் யூனியனில் பங்கை யெடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன் பத்திரிகைச் சந்தா பாக்கிகளை உடனே செலுத்திவிட வேண்டு மென்று இன்னொரு தடவை கேட்டுக் கொள்கிறேன்.

ஏ. இராஜகோபால ரேட்டி,
பிரஸிடெண்டு.

## பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் ஐந்தாவது மாஹாண மஹாநாடு.

பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் 5-வது மாஹாண மஹாநாடு சென்னை மயிலாபூரில் பெண்ணாத்தூர் சுப்பிரமணிய ஐயர் ஹைஸ்கூலில் அக்டோபர் மீ 4உயன்று நடை பெற்றது. சுமார் 200 பஞ்சாயத்து பிரதிநிதிகள் ஆஜரானார்கள். பெண்ணாத்தூர் சுப்ரமணிய அய்யர் ஹைஸ்கூலானது



வெகு சோர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் நன்றாய் ஓங்கி அபிவிருத்தியாக வேண்டு மென்கிற மொழிகளுடன் ஒரு பச்சைக் கொடி நாட்டப்பட்டிருந்தது. பெண்ணாத்தூர் சுப்பிரமணிய ஐயர் ஹைஸ்கூலின் சபா மண்டபமே நமது தேசத்தலைவர்களின் படங்களுடன் அலங்கரிக்கப் பட்டிருந்தது. பாரெஸ்டு இயக்கத்தில் சிரத்தை வஹிக்கிற பல பிரமுக கனவான்களும் வந்திருந்தார்கள். காலை 10-மணிக்கெல்லாம் சபா மண்டபம் நிறைந்து விட்டது. வந்திருந்த பிரமுக கனவான்களுள் அடியில் குறிப்பிட்ட பெயர்களும் வந்திருந்தார்கள். அஸெம்பிளியில் உதவித்தலைவராக இருந்தவரும், நமது முக்கிய தலைவர்களுள் ஒருவருமான திவான் பஹதூர் டி. ரங்காச்சாரியார் ஸி. ஐ. ஈ. அவர்கள், கவுன்சில் ஆப்ஸ்டேட் மெம்பராக விருக்கிறவரும், நமது முக்கிய தலைவர்களில் ஒருவருமாகிய கனம். திவான் பகதூர் ஜீ. நாராயணசாமி செட்டியார் ஸி. ஐ. ஈ. அவர்கள், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக கீர்த்தி பெற்ற திவான் பஹதூர் பட்டுகேசவ பிள்ளை அவர்களைப் போலவே உழைத்து வந்திருக்கிறவரும், சட்டசபையில் தளராமல் அவைகளின் சம்பந்தமாக வாதித்துப் போராடி வந்திருக்கிறவரும், சிறந்த தேச பக்தரும் தேச ஊழியருமான, ஸ்ரீமான் ஜீ. ஹரி ஸர்வோத்தம ராவ் அவர்கள்; சென்னை கூட்டுறவு ஐக்கியத்தில் பிரமுக ஊழியரான ஸ்ரீமான் வீ. வெங்கட சுப்பய்யா அவர்கள். சரியாய் 11-மணியானதும் அக்ராஸனர் ஸ்தானத்தை வஹிக்க வேண்டிய, நமது மஹாணக் கூட்டுறவு ஐக்கியத்தின் தலைவரும், கவுன்ஸில் ஆப்ஸ்டேட் மெம்பராக விருந்தவருமானவும், சிறந்த தேச ஊழியர்களில் ஒருவருமான, ஸ்ரீமான் வி. ராம்தாஸ்பந்துலு அவர்கள் வந்து சேர்ந்தார். மஹாநாடு உடனே ஆரம்பித்தது.

முதல் முதலில் வரவேர்ப்பு கமிட்டியின் தலைவரும் சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனின் பிரஸிடெண்டுமாகிய ஸ்ரீமான் ஏ. இராஜகோபால ரெட்டி அவர்கள் ஒரு இனிய உபந்நியாஸத்தில் பிரதிநிதிகளுக்கு நன்கு வரவையளித்தார். அவர் பின்வருமாறு கூறினார்.

சிநேகிதர்களே,

சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார் மஹாண ஐக்கியத்தின் சார்பில் உங்களுக்கு நான் இந்த ஐந்தாவது மாஹாநாட்டிற்கு நன்கு வரவை யளிக்கிறேன் நான்காவது மஹாநாடு சென்ற வருஷத்தில் ஓங்கோலில் நமது சிறந்த தலைவரும் தேசாபிமானியாகிய ம. ா. ா. ஸ்ரீ. திவான் பஹதூர் பி. முனிசாமி நாயுடு காருவின் தலைமையில் நடை பெற்றது. அந்த மஹாநாட்டிற்கு வாராதவர்கள் அநேகர் இம்மஹா நாட்டில் வந்திருக்கக் கூடுமாதலால் சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கத்தின் சரித்திரத்தையும் நான் பிரஸிடெண்

டென்கிற அந்தஸ்தை வஹிக்கிற நமது மாஹாண யூனியனின் சரித்திரத்தையும் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

1926-ம் வருஷத்தில் சிறப்பு வாய்ந்த கவர்னர் கோஷன் பிறபுவால் திறக்கப்பட்டு, கவர்மெண்டில் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷய நிர்வாஹமெம்பராயிருந்த கனம். ஸ்ர் முகம்மத் உஸ்மான் ஸாகிப் பஹதூர் அவர்களால் தலைமை வஹிக்கப்பட்ட, பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் இரண்டாவது மாஹாண மஹா நாட்டில், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் பணங்களை வீண் போகாதபடி காப்பதற்காகவும், அப்பணங்களை ஒன்று திரட்டி வைப்பதற்காகவும், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் அபிவிருத்தியைப் பாதுகாப்பதற்காகவும் ஒரு மாஹாண யூனியன் ஏற்படுத்தப்பட்டது. அநேக பஞ்சாயத்துகள் தங்களுடைய பணங்களை மேற் கூறிய யூனியனில் வைத்தன. ரூ 33000 இம்மாதிரியாக சேர்ந்தது. அத்தொகையானது சென்னை ஸென்டிரல் அர்பன் பாங்கியில் என் பேரிலும், பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸராக விருந்த ம.ா.ா.ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வீ. சே. வீராஸாமி அய்யா அவர்களின் பேரிலும் வைக்கப்பட்டது. பின்பு ரெவினியூ போர்டார் பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸருடைய ஸம்பந்தமிருக்கக் கூடாதென்று உத்திரவிட்டார்கள். அதன் பேரில் ம-ா-ா-ஸ்ரீ ராவ் ஸாஹிப் வீ. கே. வீராசாமி அய்யா அவர்களின் ஸம்பந்தம் நீக்கப்பட்டது. பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸரின் ஸம்பந்தம் நீக்கப்பட்டதின் பேரில் யூனியனைக் கோ ஆபரேடிவ் ஸொஸைடி சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்ய முயர்ச்சிகள் செய்யப்பட்டன. ஆனால், ரெவினியூ போர்டாரும், கோ ஆபரேடிவ் ஸொஸைடி ரிஜிஸ்டிராரும் அப்படிச் செய்வது சட்டப்படி சாத்தியமில்லை யென்று சொன்னார்கள். ஆகவே, யூனியனானது 1928-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதியன்று ரெவினியூ போர்டார் குறிப்பிட்டபடியே இந்தியன் கம்பனி சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. ஆதியில் யூனியன் ரிஜிஸ்டராகாத கம்பனியாகவிருந்த போதிலும் அந்தக் கோளாரானது அது கம்பனி ஆக்டின்படி ரிஜிஸ்டரானபடியால் நீக்கப்பட்டது. முந்திய ரிஜிஸ்டராகாமலிருந்த பாங்கிக்கு யூனியனின் ஆஸ்திபாஸ்திகள் ரொக்கங்கள் கடன்கள் இவையெல்லாம் பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டால் ஜெனரல் பாடியின் தீர்மானத்தின்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. யூனியன் ரிஜிஸ்டரான பின்பு கணக்குகள் ஸெர்டிபைட் ஆடிடரால் பரிசோதிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன. ஆடிடரின் ரிபோர்டுகள் "ரூரல் இந்தியாப்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பனி உதவி ரிஜிஸ்டிராருக்கும் அனுப்பப்பட்டன.

பண விவர ஸம்பந்தமாய் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. டிபாஸிட்டுகளின் பெரும்பாகம் வாபிஸாகி விட்டது. மீதித் தொகையும் சீக்கிரத்தில் வாபிஸாகி விடும் என்று தோன்றுகிறது. பஞ்சாயத்துகள் தங்களுடைய



நிதிகளைக்கிட்டின கோ ஆபரேடிவ் பாங்கிலோ அல்லது போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கிலோ வைக்க வேண்டுமென்று கவர்மெண்டார் உத்திரவிடக் கூடுமானால் ஏன் அவைகள் அப்பணங்களை பஞ்சாயத்தார் யூனியனில் வைக்கக் கூடாதோ தெரியவில்லை. பஞ்சாயத்தார் யூனியனே ஆதியில் இதற்காகத்தானே ஸ்தாபிக்கப்பட்டது.

டிபாஸிட்டுகள் எல்லாமே வாப்ஸாகி விட்டாலும் பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் நடைபெறத்தான் வேண்டும். அது பாரெஸ்டு பஞ்சாயத்தார் அஸ்ஸோஸியேஷனோடு கலந்து கொண்டு, கோ ஆபரேடிவ் ஸொஸைடிகளுக்கு மஹாணக் கோ ஆபரேடிவ் ஸங்கம் எவ்வித ஊழியங்களைச் செய்கின்றதோ, அம்மாதிரியான ஊழியங்களை பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்குச் செய்ய வேண்டும். யூனியனும் அஸ்ஸோஸியேஷனும் நன்றாய் வேலை செய்ய வேண்டுமானால் பணம் வேண்டும். ஆகவே, நீங்கள் பஞ்சாயத்துக் காடுகளிலிருந்து வருகிற வரும்படியில் எவ்வளவு பாகத்தை இச்சிலவின் நிமித்தம் கொடுக்கக் கூடுமென்று யோசிக்க வேண்டும். இச்சிலவு பஞ்சாயத்துகளுக்கு வெகு முக்கியமான சிலவு என்று நான் சொல்ல வேண்டுமா? நமது அக்ராஸனாதிபதியவர்கள் மஹாணக் கூட்டுறவு ஐக்கியத்தின் பிரஸிடெண்டாகவிருக்கிறார். அவர் இவ்விஷயமாகவும் இன்னும் இது சம்பந்தமாக பல விஷயமாகவும் நமக்கு யோசனைகளைச் சொல்வாரென்று நம்புகிறேன்.

யூனியனின் சிலவு ஸம்பந்தமாகப் பேசும் பொழுது எனக்கு நமது பத்திரிகையின் விஷயம் முன்னுக்கு வருகிறது. நமது பத்திரிகையாகிய "ரூரல் இந்தியா" வானது நமது இரண்டாவது மாஹாண மஹாநாட்டின் தீர்மானத்தின் படி ஏற்படுத்தப்பட்டது. நமது பத்திரிகை பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சொந்தப் பத்திரிகையாகையால் அதை ஒவ்வொரு பாரெஸ்டுப் பஞ்சாயத்தும் சந்தா சேர்ந்து வாங்கத்தான் வேண்டியதாகவிருக்கிறது. பத்திரிகை வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவர்கள் மேற்கூறிய மஹாநாட்டில் வந்திருந்த பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் தான்.

பத்திரிகை பஞ்சாயத்தார்களுக்கு வெகு உயர்வான உபதேசங்களைச் செய்திருக்கிற தென்பதற்குச் சரியான அத்தாக்ஷிகள் பஞ்சாயத்துகள் எழுதியிருக்கிற கடிதங்களே யாகும். கிராம பஞ்சாயத்து புல்லடன்னின்று போய்விட்டது. "ரூரல் இந்தியா" அப்பத்திரிகை விஷயங்களையும் எடுத்துச் சொல்லி வருகிறது. கிராமாபி விருத்தி விஷயங்களில் ஜனங்களுக்கு ருசி அதிகமாகிக் கொண்டு வருகிறது. நமது பத்திரிகை நிற்காமல் நன்றாய் நடைபெறவேண்டுமென்று பாரெஸ்டு பஞ்சாயத்தார் கோறுவது புகழத்தக்கது. ஆனபோதிலும், சில பாரெஸ்டு பஞ்சாயத்துகள் விவேகருசியில்லாமல் பத்திரிகை வேண்டாமென்று எழுதுகின்றன. அவர்களுக்குச்சரியான விவேகம் ஏற்பட வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அவர்கள் தாங்கள்

கிராம சமூஹத்தின் க்ஷேமத்திற்குப் பாத்தியப் பட்டவர்களென்று உணர வேண்டும் அப்படி அவர்கள் உணர்வார்களாகில் அவர்கள் பத்திரிகை விஷயங்களில் ருசியில்லாமலிருக்க மாட்டார்கள் பத்திரிகையை வேண்டா மென்றும் சொல்லமாட்டார்கள். கவர்மெண்டார் காடுகளை பஞ்சாயத்தார்களின் நிர்வாஹத்திற்கு ஒப்பிவிக்கும் பொழுது அவர்கள் பஞ்சாயத்துகள் கிராமங்களில் க்ஷேமத்தையும் செல்நிலையையும் உயர்த்த வேண்டு மென்றே நோக்கங் கொண்டார்கள். அவிவேக பஞ்சாயத்தார்கள் ஒருக்காலும் அந்நோக்கத்தைப் பயன்படச் செய்ய மாட்டார்கள். பஞ்சாயத்தார்களை விவேக வழிகளில் செலுத்தக் கூடியது நமது பத்திரிகை. அதை எல்லாப் பஞ்சாயத்துகளும் கட்டாயமாய் வாங்க வேண்டு மென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்வேன். நமது இயக்கம் நன்றாய் நடைபெற வேண்டும். நம்முடைய இயக்கம் அழியாது. அதை நாம் நம்முடைய சந்ததியாருக்கு நல்ல நிலையிலே ஒப்புவிக்கப் பாத்தியப் பட்டிருக்கிறோம்.

தற்சமயத்தில் ரெவினியூ போர்டில் மிஸ்டர் எச்சு. ஏ. பி. வெர்னன் ஸீ. எஸ். ஐ., ஸீ. ஐ. ஈ. அவர்கள் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷய அதிகாரியாக விருந்து கொண்டு நமது இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறார். கவர்மெண்டில் கனம் ஏ. ஓய். ஜீ. காம்பெலும் அவ்விதமாகவே உயர்வான ஊழியங்களைச் செய்து வருகிறார். ஆகவே, நமது இயக்கம் ஓங்கிவிடுமென்பதில் சந்தேகமேயில்லை.

இன்னொரு முக்கியமான விஷயம்: நாம் ஜில்லாச்சங்கங்களை யேற்படுத்தி அவைகளை மாஹாண யூனியனோடு தொடுத்து வேலை செய்யவேண்டும். ஜில்லாச் சங்கங்களின் ஏற்பாடு சம்பந்தமாக நீங்கள் ஒரு கமிட்டியை நியமிக்கலாம்.

பாரெஸ்டு பஞ்சாயத்து ஸம்பந்தமாக போர்டார் ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டரைத் தயாரித்து கவர்மெண்டுக்கு அநுப்பினார்கள். கவர்மெண்டார் அதை ஒரு கம்மிட்டியிக்கு ஆலோசனைக்கு அநுப்பினார்கள். நமது பஞ்சாயத்து அஸோஸியேஷனின் தலைவராகியவும், நமது சிறந்த தலைவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் பி. முனிசாமி நாயுடுவும் இரண்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளும் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்களென்பது நமக்கு நிரம்ப ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. நமது யூனியனின் ஜனரல் பாடியின் சார்பில் நானும் ஸ்டாண்டிங்கு ஆர்டர் சம்பந்தமாக கவர்மெண்டாருக்கு அபிப்பிராயத்தை எழுதியனுப்பி யிருக்கிறேன். ஸ்டாண்டிங்கு ஆர்டரில் சில நன்மைகள் ஏற்பட்டிருந்த போதிலும், சரியானபடியாக நமக்கு நன்மைகள் ஏற்படவில்லையென்றே நான் சொல்லுவேன்.

இவ்வார்த்தைகளோடு உங்கள் எல்லோருக்கும் நல்வரவை அளிக்கிறேன். ஐயா, உங்களையும் நான், வந்திருக்கும் பிரதிநிதிகள் சார்பில், இம்மஹா



நாட்டில் தலைமையை வஹிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்களைப் போன்ற சிறந்த தேசாபிமானி எங்களுக்கு கிடைத்ததே எங்களுடைய அதிர்ஷ்ட மென்றே சொல்வேன்.

ஸ்ரீமான் இராஜகோபால ரெட்டி மேற்கூறியபடி நன்கு வரவையளித்த பின்பு சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார் ஐக்கியத்தின் பத்திரிகையாகிய ரூரல் இந்தியாவின் ஆசிரியராகிய ஸ்ரீமான் ரிடைர்டு டிப்டிகலெக்டர் ஏ. சுவாமிநாத ஐயர் அடியில் கண்ட படி ஒரு சிறிய உபந்நியாஸத்தைச் செய்தார்:—

சகோதரர்களே.

1926-ம் வருஷத்தில் சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கவர்மெண்டார் சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ஒரு சட்டத்தின் படி நிர்மாணிக்கப் பட்டு வேலை செய்யவில்லை யென்றும் அவைகளுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தைக் கொடுக்கிறவிஷயம் அவர்களின் ஆலோசனை யிலிருப்பதாகவும் கூறினார்கள். தற்போதில் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் பஞ்சாயத்து டிப்டி தாசில் தார்களால் ஏற்படுத்தப் படுகின்றன. அவைகள் கிராம ஜனங்களுக்கு பாத்தியப்பட்டவைகளாக விருக்க வேண்டியதுடன் அவைகள் கவர்மெண்டாருடன் குத்தகை உடன் படிக்கைகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்கின்றன. அவைகளுக்குச் சட்ட பூர்வமான அந்தஸ்திருந்தால்தான் குத்தகை ஷரத்துக்களுக்கு சரியான மதிப்பு உண்டாகும். அவைகள் பல கடமைகளை நிறை வேற்ற வேண்டியிருக்கின்றன; மேய்ப்புக் கட்டணங்களை வசூலிக்க வேண்டியிருக்கின்றன; பாரெஸ்டுப் பாதுகாப்புச் சிலவையும் அபிவிருத்திச் சிலவுகளையும் நடத்த வேண்டியிருக்கின்றன; ஆகவே அவைகளின் அதிகாரங்களும் கடமைகளும் சட்ட பூர்வமாய் நிர்ணயிக்கப்பட வேண்டியது வெகு அவசர அவசியமான விஷயமாகிறது. தவிரவும் கவர்மெண்டார் கிராம ஜனங்களின் நிர்வாஹத்திற்கு கிராமக் காடுகளை மாற்றி விட்டபடியால் அவர்கள் பஞ்சாயத்துக் காடுகளிலிருந்து லாபங்களை யடைய உத்தேசிக்கக் கூடாது. 1912 இல் வேலை செய்த பாரெஸ்டு கம்மிட்டியாரும் அப்படியே அபிப் பிராயத்தைச் சொன்னார்கள். கவர்மெண்டும் அவ்வபிப்பிராயத்தை அப்பொழுது அங்கீகரித்தன. தற்போது கவர்மெண்டாரின் ஆலோசனையில் இருக்கப்பட்ட ஸ்டாண்டிங்கு ஆர்டரும் அவ்விதமாகவே கூறுகிறது. இக் காடுகள் கவர்மெண்டாரின் நிர்வாஹத்தில் இருந்த பொழுது இவைகளிலிருந்து கவர்மெண்டார் லாபத்தை உத்தேசித்ததில்லை. ஆகவே பஞ்சாயத்துகள் தான் அவைகளின் காடுகளிலிருந்து உண்டாகும் லாபங்களை யெல்லாம் அடைய வேண்டுமென்பது தான் நியாயமான விஷயம். ஆகவே கவர்மெண்டார் தாங்கள் தான் பஞ்சாயத்துக் காடுகளின் சொந்தக்காரரென்கிற காரணத்தை உத்தேசித்து அல்பதீர்வையைத்தான் விதிக்கவேண்டும்.

இன்னொருவிஷயம். கவர்மெண்டார் அதிக மேய்ச்சல் கட்டணங்களை அடைவது பிசகு அநுமதிகொடுக்கப் பட்டசங்கியைச்கு மேல்பட்டு மேய்ச்சலை யநுஷ்டிக்கிற பஞ்சாயத்துகளின் அதிகமேய்ச்சல் வசூல்களை இதர பஞ்சாயத்துகளுக்கு அபிவிருத்தி வேலைகளுக்காகக் கொடுக்கலாம். இவ்விதமாக, தப்புப் பண்ணுகிற பஞ்சாயத்துகளை தண்டிக்கலாம். மேய்ச்சல் மிருகங்களின் சங்கியைகள் ரிஸர்வுகளும் நிர்ணயிக்கப்படும் பொழுது ரிஸர்வுகளின் நிலைமைக்குத் தக்கபடி நிர்ணயிக்கப்படவேண்டும். பஞ்சாயத்து பாரெஸ்டுகள் இது சம்பந்தமாக ஸர்வே செய்யப்படவேண்டும். கிராம ஜனங்கள் அவைகளிலிருந்து பல சௌகரியங்களின் சம்மந்தமாகவும் அந்த சர்வே நடத்தப் படவேண்டும்.

கிராமங்களில் கறவை மாடுகளும், வண்டிமாடுகளும் உழவுமாடுகளும் வரவர க்ஷீணித்து வருவதால் பஞ்சாயத்துகள் சினைக்காளைகளை வைத்து வளர்க்க வேண்டும். அதிக வரும்படியுள்ள பஞ்சாயத்துகள் இவைகளை வைத்துக் கொண்டு கிராமத்தில் உபயோகப் படுத்தலாம். அவைகளின் மூலமாக அவர்களுக்கு வரும்படியும் ஏற்படும். பஞ்சாயத்துகள் தக்க இடங்களில் புல்லைப்பயிர் செய்து அதை அறுத்து உலர்த்தி வைத்துக் கொண்டு புல்லில்லாத காலங்களில் கிராமங்களுக்கு உபயோகமாகும்படிச் செய்யலாம். தேன் கூடுகளை உண்டாக்கலாம். கோயம்புத்தூர் டவுனுக்குச் சமீபத்திலுள்ள ராமநாத புரம் கிராமத்தில் ஒய். எம். சீ. ஏ யார் தேன் ஈக்களை வைத்து தேனை உண்டாக்குகிறார்கள். பஞ்சாயத்துக் காடுகளில் கோரை, பிரம்பு முதலியவைகள் பயிர் செய்யப்படலாம். இவைகளைக் கொண்டு கிராம ஜனங்கள் சகாயத் தொழில்களை அநுஷ்டிக்கலாம். மேலே காட்டிய படி பஞ்சாயத்துக் காடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் கிராம ஜனங்களின் க்ஷேமம் மேல்மேலும் உயர்வை யடையும்.

பின்பு ஸ்ரீமான் வி. ராம்தாஸ்பந்துலு அவர்கள் அக்ராஸன ஸ்தானத்தில் அமைக்கப்பட்டு அவர் தன்னுடைய அக்ராஸன உபந்நியாசத்தைச் செய்தார் :—

சகோதரப்பிரதிநிதிகளே,

என்னை நீங்கள் தங்களுடைய அக்ராஸனராக நியமித்ததைப்பற்றி நான் உங்களை நிரம்பவும் வந்தனம்செய்கிறேன். பிரிடிஷ் ஆக்ஷியில் காட்டுஸம்ரக்ஷணம் டல்ஹௌஸி பிரபுவின் காலத்தில், அதாவது சுமார் 75 வருடங்களுக்குமுன்னமே, தொடங்கிற்று. முதல்முதலில் சென்னைக்கும், பொம்பாயிக்கும், பர்மாவிற்கும் கன்ஸர்வேடர்கள் நியமிக்கப்பட்டார்கள். 1864-இல் கவர்மெண்டில் காட்டு இலாகாவானது சரியாக ஏற்படுத்தப்பட்டது ; ஒரு இன்ஸ்பெக்டர் ஜனரலும் நியமிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து சென்னை பாரெஸ்டு சட்டமென்ற பிரத்தியேக சட்டம் 1882-இல் சென்னைக்காக



பிறப்பிக்கப்பட்டது. சென்னை பாரெஸ்டுசட்டம் இப்போவும் அமுலில் இருக்கிறது. அச்சட்டத்தின் நோக்கமானது நமது மாஹாணத்திய காடுகளின் பாதுகாப்பும் அபிவிருத்தியுமென்று சொல்லப்பட்டது. காட்டுப்பாதுகாப்பும், அபிவிருத்தியும் அதன்நோக்கமா யிருந்தபோதிலும் கிராம ஜனங்களுக்குக் காலாகாலமாக அனுபவபூர்வமாய் காடுகளிலிருந்து ஏற்பட்டிருந்த மேய்ச்சல், விறகு, எருமுதலிய உரிமைகளைப்பற்றி ஒருவார்த்தையும் அதில் காணப்படவில்லை. ஆகவே, ஜனங்களுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டன ; ஜனங்கள் கூக்குறலிட ஆரம்பித்தார்கள். நான்சிறுவனா யிருக்கும்பொழுது எல்லா மாஹாண மஹாநாடுகளிலும், ஜில்லா மஹாநாடுகளிலும் மேற்கூறிய கஷ்டங்களைப்பற்றி தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்டு வந்தன. பிற்காலத்தில் ஜனங்கள் கவர்மெண்டாரின் அச்சிரத்தையை உத்தேசித்து தீர்மானங்களைக் கைக்கொள்வதை சற்று நிறுத்திக் கொண்டார்கள்போல் காண்கிறது.

ஆனபோதிலும், இக்கூக்குறல்களை கவர்மெண்டார் சற்று கவனித்தார்கள். 1890-ம் வருஷத்தில் அவர்கள் தங்களுடைய பாரெஸ்டு பரிபாலன நோக்கத்தை வெளியிட்டார்கள். அதாவது, காட்டை பாதுகாத்து அபிவிருத்தி செய்வது கவர்மெண்டாருக்கு லாப உத்தேசத்துடனல்லவென்றும், கிராம ஜனங்களின் மேய்ச்சல், விறகு, எரு, சௌகரியங்கள் திறமாய் ஏற்படவேண்டியதுதான் தங்களுடைய முக்கிய உத்தேசமென்றும் கவர்மெண்டார் பிரகடனம் செய்தனர். மேலும், அவர்கள் மலைப்பிரதேசங்களிலுள்ள காடுகள்தான் தச்சுவேலைக்கு வேண்டிய பெரிய விருக்ஷாபிவிருத்திக்கு உபயோகிக்கப்படவேண்டுமென்றும், சமவெளிகளில் உள்ள காடுகளனைத்தும் கிராம ஜனங்களின் மேய்ச்சல், விறகு, எரு, கலப்பைமரம் முதலிய சௌகரியங்களுக்காகவே உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். 1894-ம் வருஷத்திலும் கவர்மெண்டார் இந்நோக்கங்களை வற்புறுத்தி வெளியிட்டனர். அப்படியிருந்தும் இவ்வுத்தேசம் நடவடிக்கையில் நிறைவேறவில்லை ; சென்னை பாரெஸ்டு சட்டம் கிராமஜனங்களின் க்ஷேமத்திற்கு விரோதமாகவே இருந்தது, ஜனங்களின் பாரெஸ்டு கஷ்டங்கள் அதிகரித்தன ; அவர்கள் ஓயாமல் கவர்மெண்டாருக்கு முறையிட்டுக்கொண்டு வந்தபடியால், கவர்மெண்டார் 1912 இல் ஒரு கம்மிட்டியை நியமித்தார்கள். இக்கம்மிட்டியார் விசாரணைகளைச் செய்தார்கள் ; முடிவில், ஜனங்களுக்குச் சென்னை பாரெஸ்டு சட்டத்தினால் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றே அபிப்பிராயம் சொன்னார்கள். அவர்கள், கிராம ஜனங்களுக்கும் பாரெஸ்டு இலாகா சிப்பந்திகளுக்கும் உள்ள சம்பந்தங்கள் வெகு குறைவில் வைக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். அதாவது, அவர்கள் கிராமக்காடுகள் கிராம ஜனங்களின் நிர்வாகத்திற்கே ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். கவர்மெண்டார் மேற் கூறிய கமிட்டியாரின் தீர்மானங்களை ஒப்புக்கொண்டு

கிராமக்காடுகளை கிராமங்களிலுள்ள கால் நடைச் சொந்தக்காரர்களை அங்கத்தினர்களாக உடைத்தாயுள்ள பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்புவிக்கத் தீர்மானித்தார்கள்.

1928-29இல் 1102 பாரெஸ்டு பஞ்சாயத்துகள், 22 ஜில்லாக்களில், மொத்தமாக 3500 சதுர மைல் விஸ்தீரணத்தோடு, இருந்தன. 1912-ம் வருஷம் முதல் சுமார் 10 வருஷங்கள் வரையில் இப் பஞ்சாயத்துகளின் முயர்ச்சிகள் வெகு அல்பமாக விருந்தன. 1922இல் தான் அவைகளின் நிமித்தம் அபிவிருத்தி முயர்ச்சிகள் சரிவர கைக் கொள்ளப்பட்டன. அவ்வருஷம் அக்டோபர் மாதத்தில் சீப்கன்ஸர் வேடரின் கீழ் பஞ்சாயத்துகளை மேல் பார்வை யிடுவதற்காக ஒரு பிரத்தியேக இலாகா நியமிக்கப்பட்டது. ஜுலை 1925இல் இந்த பிரத்தியேக இலாகாவின் மேல்பார்வை சீப்கன்ஸர் வேடரிடமிருந்து ரெவினியூ போர்டாருக்கும் மாற்றப்பட்டது. இப்போதிய நிலைமை என்ன வென்றால் கிராம ஜனங்களின் சௌகரியங்களைச் செய்து வைக்க வேண்டிய இப்பஞ்சாயத்துகள். பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்கள் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள், ஜில்லா கலெக்டர்கள், போர்டு ஆப் ரெவினியூவில் லாண்டு ரெவினியூ மெம்பர் இவர்களின் அமுலுக்குள் இருக்கின்றன.

பஞ்சாயத்துகள் ஏற்படாத காலத்தில் இருந்ததை விட இப்பொழுது கிராம ஜனங்களின் க்ஷேமமும் அபிவிருத்தியும் எவ்வாறு உயர்த்தப் பட்டிருக்கின்றன வென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். எங்கே போனாலும் குறைகளைச் சொல்கிறார்கள். முந்திய நாலு மஹாநாடுகளின் தீர்மானங்களே குறைகள் அதிகமாக விருக்கின்ற வென்பதற்குத்தக்க அத்தாக்ஷியாகும். பஞ்சாயத்துகள் முயர்ச்சி செய்வதற்குச் சரியான அதிகாரங்களையும் அந்தஸ்தையும் கொடுக்கக் கூடிய ஒரு சட்டமும் இல்லாதது ஒரு பெரிய முக்கிய குறை. பஞ்சாயத்துகள் வேலை செய்வதற்கு அதிகாரம் அவைகள் சர்க்காரோடு செய்து கொண்டிருக்கிற அக்ரீமெண்டு தான். மேற்கூறிய அக்ரீமெண்டானது சில கட்டணங்களை வசூலிப்பதற்கு பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது. அது பஞ்சாயத்துகள் மேற்கூறியவாறு வரும்படிகளை அடைந்த பிறகு அப்பணத்திலிருந்து அவைகள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய அஸ்ஸெஸ்மெண்டு தொகையையும் நிர்ணயிக்கிறது. அஸ்ஸெஸ்மெண்டு இம்மாதிரி விதிக்கப்பட வேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, பஞ்சாயத்துக்குச் சேரக்கூடிய எல்லா வரும்படிகளையும் ஒரு உத்தேசமாகக் கணக்கிட்டு பின்பு அதற்குள்ள எல்லாச் செலவுகளையும் ஒரு உத்தேசமாகக் கணக்கிட்டு மிட்டு மீதி தொகையை சர்க்கார் தீர்வையாக ஏற்படுத்த வேண்டு மென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மேற் கூறியவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிற அஸ்ஸெஸ் மெண்டுகள் அதிகத் தொகைகள் என்றும்



19397

அவை அடிக்கடி மாற்றப்படுவதால் அபிவிருத்தி முயர்ச்சிகளால் ஏற்படக் கூடிய லாபங்கள் கூட அவைகளில் சேர்ந்து விடுகின்றன வென்றும், ஒரே வாக்காக எல்லாப் பஞ்சாயத்துகளும் கூறுகின்றன. அஸ்ஸெஸ் மெண்டுகள் குத்தகை வருஷ ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டியதாக விருக்கின்றன. பஞ்சாயத்துகளுக்குப் பணம் பெர்மிட்கள் கொடுக்கப்பட்ட பிறகு தான் உண்டாகின்றன. பெர்மிட்கள் குத்தகை வருஷ ஆரம்பத்திலேயே கொடுக்கப்படுகிறதில்லை. ஆதலால், பஞ்சாயத்தார்கள் அஸ்ஸெஸ் மெண்டை தங்களுடைய சொந்தப் பணத்தைக் கொண்டே செலுத்துகிறார்கள். மேற்கூறிய விஷயங்களால் பஞ்சாயத்துகளின் அபிவிருத்தி கெட்டுப் போகிறது. அவைகளுக்கு வரும்படிகள் விருத்தியாகிறதில்லை. கவர்மெண்டார் அஸ்ஸெஸ் மெண்டுகளை வெகு குறைவாக விதிக்க வேண்டும். அவர்கள் பஞ்சாயத்து விஷயங்களில் லாப உத்தேசத்தையே கொள்ளக் கூடாது. அபிவிருத்தி முயர்ச்சிகளால் பஞ்சாயத்துகளுக்கு ஏற்படும் பணங்களை அவர்கள் அஸ்ஸெஸ் மெண்டுகளில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அஸ்ஸெஸ் மெண்டுகள் ஒரே காலத்தில் வசூலிக்கப்படாமல் நாலு ஐந்து தவணைகளில் வசூலிக்கப்பட வேண்டும். அஸ்ஸெஸ் மெண்டுகள் நீண்ட காலத்திற்கு ஒரே விசையாக ஏற்படுத்தப்பட வேண்டும். பஞ்சாயத்துக் காடுகளிலிருந்து கவர்மெண்டார் இப்பொழுது அடையும் வரும்படியானது முன்னே பஞ்சாயத்துகளில்லாத காலத்தில் அவைகள் அடைந்ததைக் காட்டிலும் நிரம்பவும் அதிகமாக விருக்கிறது. 1929-30ம்ஞுலத்திய திட்டத்தில் கவர்மெண்டாருக்குப் பஞ்சாயத்துகளிலிருந்து வரும்படியானது $3\frac{1}{4}$ இலக்ஷ ரூபாயாகவும் சிலவு 93400 ரூபாயாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, கவர்மெண்டார் பஞ்சாயத்துக் காடுகளிலிருந்து 2 இலக்ஷ ரூபாய் லாபத்தையடைகிறார்கள்.

பஞ்சாயத்து வரும்படிகளில் சில வற்றையும் கவர்மெண்டார் தாங்களே அடைகிறார்கள். அதிக மேய்ச்சல் வரும்படிகளை அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு ரிஸர்வுக்கு இத்தனை கால் நடைகள் தான் மேய்ப் புகவு விடலாம் என்கிற நிபந்தனை இருக்கிறது. அந்த லிமிட்டுக்கு மேல் கால் நடைகள் மேய்ந்தால் காடு கெட்டுப்போகு மென்பது அதற்குக் காரணம் அதிக கால் நடைகள் மேய்ந்தால் அவைகளுக்கான கட்டணங்களை கவர்மெண்டார் எடுத்துக் கொள்கிறார்கள். ரிஸர்வுகளின் நிமித்தமாக அநுமதிக்கப்பட்ட சங்கியை குறைவுபட்டுப் போனால் கவர்மெண்டார் அஸ்ஸெஸ் மெண்டில் வஜாக்கொடுக்காமலிருக்கும் பொழுது ஏன் அவர்கள் இவ்வதிக மேய்ச்சல் கட்டணங்களைப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்காமல் தாங்களே எடுத்துக் கொள்ள வேண்டுமோ தெரியவில்லை. அன்றியும்; ஒரு பஞ்சாயத்து குத்தகை வருஷத்தின் மத்தியில் புதிதாகக் கால் நடைகளை வாங்கினால் அவை

களை அவன் எங்கே கொண்டுபோய் மேய்க்கிறதாம்? இன்னொரு வரும்படி என்னவெனில் கம்பவுண்டிங்கு கட்டணங்கள். கம்பவுண்டிங்கு கட்டணங்களிலும் கவர்மெண்டார் ஆசை வைத்து எடுத்துக்கொள்கிறார்கள். எல்லா பஞ்சாயத்துகளுக்குமே கம்பவுண்டிங்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும், கம்பவுண்டிங்கு பீஸ்கள் முழுமையுமே பஞ்சாயத்துகளைச் சேரவேண்டும். இப்பொழுது கலெக்டர்கள் பஞ்சாயத்துகள் கேசுகளை ரிபோர்டு செய்தால் அவைகள் நிமித்தமாக விதிக்கப்பட்ட கம்பவுண்டிங்கு கட்டணங்களில் பாதியை பஞ்சாயத்து களுக்கு வருஷா வருஷ கிராண்டுகளாகக் கொடுக்கலாமென்று ஒரு கவர்மெண்டு உத்திரவு உண்டாயிருக்கிறதே அது போதாது.

17 வருஷங்களுக்கு முன் வேலை செய்த பாரெஸ்டு கம்மிட்டியார் லோகல் பாரெஸ்டு என்று பகுக்கப்பட்ட காடுகளை கவர்மெண்டார் பஞ்சாயத்தார்களின் நிர்வாஹத்திற்கு ஒப்புவிக்க வேண்டும் என்று கவர்மெண்டுக்கு சிபார்சு செய்தனர். இன்னமும் அக்காடுகள் ஒப்புவிக்கப்படவில்லை. மேலும், புரோவின்ஷியல் பாரெஸ்டு களிலேயே அநேக கிராமங்களில் சிரிய துண்டுகள் பயிர் நிலங்களை யொட்டி யிருப்பதோடு அவைகள் "புரோவின்ஷியல் பாரெஸ்டு" களாக உதவுகிறதுமில்லை. ஆனது பற்றியே முந்திய கன்பரன்சுகளில் நீங்கள் பாரெஸ்டுகள் மறுபடியும் வகுப்புகளாக பிரிக்கப்பட வேண்டு மென்றும், ஹார்ன் கம்மிட்டியில் 4-வது வகுப்பு என்று பகுக்கப்பட்ட காடுகளெல்லாமும் முன் கூறப்பட்ட புரோவின்ஷியல் காட்டுத் துண்டுகளும் பஞ்சாயத்துகளுக்கு ஒப்புவிக்கப்பட வேண்டு மென்றும் கவர்மெண்டைக் கேட்டுக் கொண்டீர்களே; அது சரிதான். கவர்மெண்டார் பஞ்சாயத்துகளைக் கேழ்க்காமல் இவ்வித நிலங்களை தர்காஸ்தில் கொடுக்கவும் கூடாது.

மேற்கூறிய விஷயங்களெல்லாம் பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு யோக்கியதையையும் அந்தஸ்தும் எப்படி ஏற்பட வேண்டுமோ அப்படி ஏற்படவில்லையென்றும், அவைகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் ஒரு சட்டம் தான் விவரிக்க வேண்டு மென்றும், அவைகளின் முயர்ச்சிகள் தற்சமயத்தில் போல் டிப்டி தாசில்தார்களின் உத்திரவுகளைப் பொருத்திருக்கக் கூடாதென்றும், டிப்டி தாசில்தார்களும், டிவிஷனல் ஆபீசர்களும், கலெக்டர்களும், ரெவினியூ போர்டாரும் அவைகளை, கூட்டுறவு இலாகா உத்தியோகஸ்தர்கள் கூட்டுறவு சங்கங்களை எவ்விதமாக கவனித்து ஆதரிக்கிறார்களோ, அத்தன்மையாக கவனித்து ஆதரிக்க வேண்டு மென்றும் எடுத்துக் காட்டுகின்றன. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் சரியாய் அபிவிருத்தியாகி, கவர்மெண்டார் ஆதியிலிருந்து வற்புறுத்திக் கூறி பாராட்டி வந்த கிராம ஜன க்ஷேம செல்வாபிவிருத்தி நோக்கத்தைப் பயன்படச் செய்ய வேண்டுமானால், அவைகளுக்கு சுய அதிகாரமும் சட்ட பூர்வமான அந்தஸ்தும், மேய்ச்சல் முதலிய விஷயங்களில் விகிதங்களை விதிக்க சுய அதிகாரமும் ஏற்பட வேண்டும். அதிகாரிகளுடைய சம்பந்தங்கள் வெகு குறைவில் வைக்கப்பட வேண்டும். கிராம பஞ்சாயத்துகள் லோகல் போர்டு சட்டத்தில் சேர்க்கப்பட்டு வேலை செய்கிறபடியால் ஏன் ஒரே கிராம பஞ்சாயத்தே, இரிகேஷன் பஞ்சாயத்தின் வேலைகளையும், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் வேலைகளையும் செய்யக்கூடாது? ஏன் தனித்தனிப் பஞ்சாயத்துகள் வேண்டும்?



நீங்கள் இத்தனை மஹா நாடுகளில் போராடி வந்ததை கவர்மெண்டார் சற்று கவனித்து வந்திருக்கிறார்கள் போலும். பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் வேலைகளை நிர்ணயிக்க ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டர் ரெவினியூ போர்டாரால் தயாரிக்கப் பட்டது. அது ஒரு கம்மிட்டியாரின் ஆலோசனைக்கு வைக்கப் பட்டது. கம்மிட்டியார் அதை பரிசீலனை செய்து சில திருத்தங்களுடன் கவர்மெண்டார் அதைப் பிரகடனம் செய்தும் பொது ஜனங்களின் அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஸ்டாண்டிங்கு ஆர்டரானது அக்ரிமெண்டில் அடங்கிய விதிகளையும் டிப்டி தாசில்தார்களுக்கு அவை சம்பந்தமாயுள்ள விதிகளையும் தான் உடைத்தாயிருக்கிறது. இந்த கன்பரன்ஸில் நீங்கள் அதைப்பற்றி ஆலோசனைகளைச் செய்து தக்க தீர்மானங்களைக் கைக்கொள்ள வேண்டும். டிராப்டு ஸடாண்டிங்கு ஆர்டரில் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்பதும் ஒப்புக் கொள்ள வேண்டியது தான். ஆனபோதிலும், அவைகள் நம்மை ஒருக்காலும் திருப்தி செய்யமாட்டா. பஞ்சாயத்துகள் சட்டபூர்வமான அந்தஸ்தை அடைந்து சுய அதிகாரங்களுடன் வேலை செய்தாலொழிய பிரஜா க்ஷேமமும் தேசாபிவிருத்தியும் நம்முடைய மாஹாணத்தில் அமையவே அமையா.

கடைசியாக எனக்கு ஒரு முக்கியமான கடமையிருக்கிறது. அதை நான் சரியாக செலுத்தத் தவறினால் என் மனம் கேளாது. அதாவது, உங்களுடைய பத்திரிகையாகிய "ரூரல் இந்தியா"வின் கௌரவ ஆசிரியராகிய ஸ்ரீமான் ஏ. சுவாமிநாதய்யர் அவாகளுக்கு அவர் செய்யும் இணையற்ற இலவச தேச ஸேவையாகிய பத்திரிகை ஊழியங்களுக்காக எனது மனப்பூர்வமான வந்தனங்களை நான் செலுத்தவேண்டும். அதை நான் செலுத்துகிறேன். "ரூரல் இந்தியா" பத்திரிகையானது நமது தேசாபிவிருத்திக்கும் பிரஜா க்ஷேமத்திற்கும் வெகு உயர்வான ஊழியங்களைச் செய்து வருகிறது. பாரெஸ்டு பஞ்சாயத்து விஷயங்களையும் குறை குற்றங்களையும் அபிவிருத்தி யோசனைகளையும் எடுத்துச் சொல்வதோடு அது நமது மாஹாண க்ஷேம செல்வ நிலை விஷயமாக பாடுபட்டு வருகிறது.

உங்களுடைய யூனியனும் ஸ்ரீமான் ஏ. இராஜகோபால ரெட்டியார் அவர்களின் தலைமையில் உற்சாகத்தை உண்டாக்கி வெகு நன்மைகளை விளைத்திருக்கிறது. ஸ்ரீமான் ரெட்டியார் யூனியனாரம்பித்தது முதல் தலைவராக

விருந்து யூனியனை அபிவிருத்தி செய்து வந்திருக்கிறார். இந்த மாஹாணா யூனியனுக்கு கிளைச்சங்கங்கள் தமிழ், தெலுங்கு, கன்னட, நாடுகளில் ஏற்பட்டு பிரச்சார வேலைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்வேன். பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் நமது கிராமாபிவிருத்திக்கு மாஹாணா க்ஷேம நிலைக்கும் அடிப்படையானது பற்றி கவர்மெண்டார் யூனியனையும் "ரூரல் இந்தியா" பத்திரிகையையும் ஆதரிக்க வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்வேன்.

அக்ராஸனருடைய உபந்நியாஸம் முடிந்தவுடன் மஹாநாடு வேலையில் அமைந்த தீர்மானங்களை ஆலோசிக்க ஆரம்பித்தது.

முதல் தீர்மானமாவது:—இம்மஹாநாடு பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தை கவர்மெண்டு உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது இப்மாதிரியான தீர்மானம் முன் மஹாநாடுகளில் கைக் கொள்ளப் பட்டிருந்தபோதிலும் கவர்மெண்டார் அவ்வேண்டுகோளை கவனிக்காமலிருக்கிறார்கள்' ஆகவே, இம்மஹாநாடு ஸ்ரீமான் ஹரிசர்வோத்தம ராவ், ஸ்ரீமான் ஏ. சுவாமிநாதய்யர், ஸ்ரீமான் வி. என். குப்பு ராவ், ஸ்ரீமான் ஏ. இராஜகோபால ரெட்டியார், ஸ்ரீமான் ஏ. கணேச ஐயர் இவர்களை ஒரு கம்மிட்டியாக நியமித்து ஒரு மசோதாவைத் தயாரித்து கவர்மெண்டாருக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறது.

இரண்டாவது தீர்மானமாவது. இம்மஹாநாடு கவர்மெண்டாரை எல்லா பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கும் கம்பவுண்டிங்கு அதிகாரத்தைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

மூன்றாவது தீர்மானம்: இம்மஹாநாட்டில் கவர்மெண்டாரை காடுகளை ரீகிளாஸிபை செய்யும் படிக்கும் "லோகல் பாரெஸ்டு" என்கிற வகுப்பில் இது வரையில் 4-வது வகுப்புக் காடுகள் என்று வழங்கிய காடுகளையும், கிராமங்களில் பயிர் நிலங்களை யொட்டியிருக்கும் புரோவின்ஷியல் பாரெஸ்டுத் துண்டுகளையும் சேர்க்கவேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறது.

நான்காவது தீர்மானம்: இம்பஹா நாடு ரிஸர்வுகளுக்கு நிர்ணயிக்கப் பட்ட சங்கியைகளுக்கு மேல்பட்டு கால் நடைகள் மேய்ந்தால் அவ்வதிக கால் நடைகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்களை கவர்மெண்டார் தாங்களே எடுத்துக் கொள்ளாமல் பஞ்சாயத்துகளுக்கே அபிவிருத்தி வேலைகளுக்காகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறது.

ஐந்தாவது தீர்மானம்: ஜில்லாக்களில் ஜில்லா பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன்களேற்பட்டு வேலை செய்தால் தான் பாரெஸ்டு பஞ்சாயத்தியக்கம் முன்னுக்கு வரக்கூடுமென்றும் அவைகளை உண்டாக்க வேண்டிய நிமித்தமாக ஆலோசனைகளைச் செய்து சொல்ல ஒரு கம்மிட்டியையும் நியமிக்கிறது.



6-வது தீர்மானம்: கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்துகளிலிருந்து லாபங்களை அடைய உத்தேசிக்கக் கூடாதென்றும், காடுகள் தங்களுடைய சொந்த சொத்துக்களென்பதற்காக அவர்கள் ஒரு குறைந்த வரியை மாத்திரம் விதிக்கலாமென்றும், அபிவிருத்தி முயர்ச்சிகளால் காடுகளில் ஏற்படும் நன்மைகளை பஞ்சாயத்துகள் அடையுமாறு அவர்கள் தீர்வைகளை எக்காலத்துக்கும் ஒரே தடவையாகவாவது அல்லது நீண்டகால ஏற்பாட்டிலாவது ஏற்படுத்த வேண்டு மென்றும், கேட்டுக் கொள்கிறது.

7-வது தீர்மானம்: வெர்னன் கம்மிட்டியார் மேய்ச்சல் கட்டண விகிதங்கள் சம்பந்தமாகவும், இதர வரும்படிகளின் சம்பந்தமாகவும் கம்பவுண்டிங்கு பீஸ்களின் லிமிட்கள் சம்பந்தமாகவும் செய்திருக்கிற சிபார்சுகளை கவர்மெண்டார் ஒப்புக்கொள்ள வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறது.

8-வது தீர்மானம்: தயாராகி யிருக்கிற ஸ்டாண்டிங்கு ஆர்டரானது சில விஷயங்களில் கவர்மெண்டாரின் பாரெஸ்டு பஞ்சாயத்து சம்பந்தமான நோக்கமாகிய கிராம ஜனங்களின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் திருப்தியாக விளக்க சாதகப்படுத்தக்கூடியதல்லவாகையால் அதை அடியோடேயே மாற்றி எழுத வேண்டு மென்று இம்மஹாநாடு கவர்மெண்டாரை வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறது. இன்னும் பஞ்சாயத்துகளின் நிலைமை திருப்தியாக உயர்த்தப்பட வேண்டு மென்றும், அவைகளுக்கு அதிக சுய அதிகாரம் வேண்டு மென்றும் வணக்கமாய்க் கூறுகிறது.

9-வது தீர்மானம்:—இம்மஹாநாடு கவர்மெண்டார் கர்நூல் ஜில்லாவில் 8 பஞ்சாயத்துகளை எடுத்து விட்டதைப் பற்றி நிரம்பவும் விசனிக்கிறது. இப்பொழுது பாரெஸ்டு பஞ்சாயத்துகள் நிர்வாஹ ஏற்பாடுகள் திருத்தி அமைக்கப் படுகிற படியால் அவைகளைத் திரும்பவும் ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறது.

10-வது தீர்மானம்:—இம்மஹாநாடு நமது யூனியனும், ரூரல் இந்தியாப் பத்திரிகையும் நிற்காமல் நடைபெறவேண்டு மென்று தீர்மானிக்கிறது. இப்பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கமே அழியாமல் பிழைத்திருப்பதற்குக் காரணம் நமது யூனியனிருந்து வேலை செய்வதும் நமது பத்திரிகையாகிய "ரூரல் இந்தியா" பிரசரிக்கப் படுவது தான் இவை இரண்டுமே எக்காரணத்திலாவது நின்றுவிடும் பக்ஷத்தில் நமது இயக்கமும் பாரெஸ்டு பஞ்சாயத்துகளும் இருந்த இடமே தெறியாமல் அழிந்து போய் விடு மென்பது நிச்சயம். பஞ்சாயத்துகள் சந்தாத் தொகைகளை பாக்கிவைத்துக் கொண்டிருப்பதால் யூனியனை நடத்து வதற்கும், பத்திரிகையை நடத்து வதற்கும் பண கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, பஞ்சாயத்துகள் உடனே சந்தா பாக்கிகளை அனுப்பா விடில் யூனியனும் பத்திரிகையும் போயேபோய் விடும். பஞ்சாயத்

துகள் சந்தா பாக்கிகளை உடனே மணி ஆர்டர் செய்வதுடன் இனி சந்தாவை உடனுக்கு உடனே அனுப்பி அப்போதைக்கப்போது பண ஒத்தாசைகளையும் செய்ய வேண்டுமென்றும் இம்மஹாநாடு கேட்டுக் கொள்கிறது.

மேற்கூறிய தீர்மானங்களெல்லாம் மஹாநாட்டால் ஏகமனதாய் கைக்கொள்ளப் பட்டன.

தீர்மானங்கள் கைக்கொள்ளப்பட்ட பின்பு ஸ்ரீமான் ராம்தாஸ் பந்துலு அவர்கள் தன்னுடைய கடைசி மொழிவைச் செய்தனர். அதாவது:- இப்பொழுது பாரெஸ்டு பஞ்சாயத்துகள் வெறும் குத்தகைக் காரர்களாக விருப்பதால் ஆதியில் கவர்மெண்டார் காடுகளை பஞ்சாயத்து நிர்வாஹத்திற்கு ஒப்பிவித்த பொழுது கொண்டிருந்த பிரஜா க்ஷேம நோக்கம் சரிவர பயன் படக்கூடவில்லை. பஞ்சாயத்துகள் சட்ட பூர்வமான அந்தஸ்தை அடைந்து சுய அதிகாரத் தோடு வேலை செய்தாலொழிய கிராமாபிவிருத்தியும் பிரஜா க்ஷேமமும் ஒருக்காலும் ஏற்பட மாட்டா. சுய அதிகாரம் அவைகளுக்கு உண்டானால்தான் அவைகள் கிராம ஜனங்களின் நன்மைக்கும் சௌகரியங்களுக்கும் திருப்தியாகப் பாடுபடக்கூடும். சட்டசபை பிரதிநிதிகளிடத்தில் நீங்கள் சொல்லி அவர்களை பாரெஸ்டு பஞ்சாயத்து சட்டம் ஒன்றை உண்டாக்கும்படிச் சொல்ல வேண்டியது வெகு அவசியமா யிருக்கிறது. லோகல் பாரெஸ்டுகள் பஞ்சாயத்து நிர்வாஹத்தில் அமைக்கப்பட வேண்டும். அவைகள் அப்படி அமைக்கப்பட்டால் வியவஸாயம் அபிவிருத்தியாகும், கிராம ஜனங்களின் தரித்திரம் வெடியும். கிராம ஜனங்கள் நல்ல மாடுகளை வைத்துக் கொள்வார்கள். அவைகளுக்கு நல்ல மெய்ச்சல் ஏற்படும். விறகு, எருக் கஷ்டங்களை அற்றுப் போம். கவர்மெண்டு வியவஸாய இலாக்காவும், மாட்டு வைத்திய இலாகாவும், கூட்டுறவு இலாகாவும் பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கத்தில் சிரத்தையை வஹித்து ஒத்துழைத்து ஒத்தாசை செய்ய வேண்டும். பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனின் முயர்ச்சிகள் இன்னமும் கவர்மெண்டாருக்கும் பொது ஜனங்களுக்கும் சரியாகத் தெறியாமலிருக்கின்றன. ஆகவே, யூனியனுனது தன்னுடைய முயர்ச்சிகளையும், வேலைகளையும் வெகு விரிவாக பிரகடனம் செய்ய வெண்டுமென்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். கடைசியாக, ஸ்ரீமான் வி. என். துப்புராவ் அவர்கள் மஹாநாட்டின் சார்பில் அக்ராஸனருக்கு வந்தனம் அளித்தார். தானும் சென்னை சட்டசபையில் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷயமாகப் பாடுபடப் போவதாக வாக்களித்தார்.

அக்ராஸனருக்கு மாலை மரியாதைகளுடன் மஹாநாடு கலைந்தது.

16397